சார்பு நீதிமன்றம், மேட்டுப்பாளையம்

முன்னிலை : திரு.பெ.க. சிவகுமார்,

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்

2022 ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 31 ஆம் நாள் திங்கட்கிழமை

(திருவள்ளுவராண்டு 2052, சுபகிருது ஆண்டு ஐப்பசி திங்கள் 14 ஆம் நாள்)

அசல் வழக்கு .148/2019

CNR.No. TNCB190004862019

1. திருமதி. எம். ராஜாமணி

2. திரு.ராஜேஷ்குமார்

3. திருமதி. அமுதவேணி ....வாதிகள்

-இடையே-

1. திருமதி. கே. முத்துலட்சுமி

2. திருமதி. செளந்தரஜோதி

3. திருமதி. வேணிகலா

4. திருமதி. கிருஷ்ணபிரியா

5. திருமதி. ஷோபனபிரியா

6. திருமதி. ரகுபதி

7. திரு. குணசேகரன்

8. திரு. மகேஷ்குமார்

9. திரு. குருமூர்த்தி ....பிரதிவாதிகள்

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தின் முன்பாக 18.10.2022 ஆம் தேதியன்று விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் வழக்குரைஞர் திரு.சிவகுரு, அவர்கள் முன்னிலையாகியும் பிரதிவாதிகள் தரப்பில் திரு. திருமூர்த்தி, அவர்கள் ஆஜராகியும் , பதிலுரை தாக்கல் செய்யாததால் ஒருதலைபட்ச உத்தரவுபிறப்பிக்கப்பட்டு ஆவண மற்றும் வாய்மொழி சாட்சியத்தை பரிசீலனை செய்தும் வாதி தரப்பு வாதுரைகளை

கேட்டும் இறுதியாக இன்று இந்நீதி மன்றம் வழங்கும்.

தீர்ப்புரை

01. இந்த வழக்கானது பாகப்பிரிவினை செய்து கொடுக்க உத்தரவிடவேண்டுமாய் தாக்கல் செய்யப்பட்டது.

02. வழக்குரையின் சுருக்கம் :-

02(1) தாவா சொத்துக்கள் ஆரம்பத்தில் சுப்பைய கவுடருக்குப் பாத்தியப்பட்டது. அவருக்கு ரங்கம்மாள் மற்றும் திருமக்காள் என்ற 2 மனைவிகள். முதல் மனைவி ரங்கம்மாள் மூலம் கானிசாமி என்ற மகன் இருந்தார். அவருடைய முதல் மனைவி இறந்த பிறகு திருமக்காள் என்பவரை 2-வது திருமணம் செய்து கொண்டார். திருமக்காள் தனது முதல் கணவர் தேசப்ப கவுடர் இறந்த பிறகு சுப்பைய கவுடரை திருமணம் செய்து கொண்டார். தேசப்ப கவுடர் மூலம் அவருக்கு ஏற்கனவே மணி, துரைசாமி என்ற 2 மகன்கள் இருந்தார்கள். சுப்பைய கவுடரை திருமணம் செய்த பிறகு அவர் மூலம் சுந்தரமூர்த்தி என்ற மகன் பிறந்தார். ஆரம்பத்தில் சுப்பைய கவுடருக்கு காளம்பாளையம் கிராமம் புல.எண். 348 ல் சுமார் 5.58 ஏக்கர் பரப்பளவுள்ள இடம் உரிமைப்பட்டிருந்தது. அவர் உயிரோடு இருந்த காலத்தில் 08.09.1969 ம் தேதியில் மேற்படி சொத்துக்களை தனது முதல் மனைவியின் மகன் கானிசாமியுடன் சேர்ந்து மேட்டுப்பாளையம் சார்பதிவாளர் அலுவலகப் பத்திர எண்.1450/1969 -ன்படி பாகப்பிரிவினை செய்து கொண்டார். அதில் "ஏ" ஷெட்யூல் சொத்துக்கள் சுப்பைய கவுடருக்கு மேல்புரம் 2.90 ஏக்கர் பரப்பளவும், "பி" ஷெட்யூல் சொத்துக்கள் கானிசாமிக்கு கிழபுரம் 2.98 ஏக்கர் பரப்பளவும் ஒதுக்கப்பட்டது.

02(2) பாகப்பிரிவினைக்குக் பிறகு சுப்பைய கவுடர் 3 பகுதிகள் கொண்ட வீடுகளும், கடையும் அவருடைய பாகத்தில் கட்டினார். அதற்குப் பிறகு சுப்பைய கவுடர் கடந்த 1992 ம் ஆண்டு தனது மனைவி திருமக்காள், மகன்கள் கானிசாமி, சுந்தரமூர்த்தி ஆகியோர்களை வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்து விட்டார். திருமக்காள் கடந்த 1994 ம் ஆண்டு தனது மகன்கள் மணி, துரைசாமி, சுந்தரமூர்த்தி ஆகியோர்களை

வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்து விட்டார். சுப்பைய கவுடருடைய சொத்தில் அவர் மனைவி திருமக்காள், மகன்கள் கானிசாமி, சுந்தரமூர்த்தி ஆகியோர்களுக்கு தலா 1/3 பங்கு பாத்தியதை உள்ளது. திருமக்காள் இறந்த பிறகு அவருடைய 1/3 பங்கு சொத்தில் அவரது மகன்கள் மணி, துரைசாமி, சுந்தரமூர்த்தி ஆகியோர்களுக்கு தலா 1/3 பங்கு அதாவது ஒவ்வொருவருக்கும் தாவா சொத்தான சுப்பைய கவுடர் சொத்தில் தலா 1/9 பங்கு பாகம் உள்ளது. சுப்பைய கவுடருக்குப் பாத்தியப்பட்ட தாவா சொத்தில் சுந்தரமூர்த்திக்கு 4/9 பங்கு பாகம் உள்ளது.

02(3) கானிசாமி கடந்த 28.01.1996 ம் தேதியில் தனது மனைவியும் 1ம் பிரதிவாதியுமான முத்துலட்சுமி தனது மகளும் 2 ம் பிரதிவாதியுமான செளந்தரஜோதி ஆகியோர்களை வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டார். சுந்தரமூர்த்தி கடந்த 1994 ம் ஆண்டில் தனது மனைவியும் 3 ம் பிரதிவாதியுமான வேணிகலா, தனது மகள்களும் 4 மற்றும் 5 ம் பிரதிவாதிகளுமான சொப்பனப்பிரியா, கிருஷ்ணப்பிரியா ஆகியோர்களை வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்து விட்டார். துரைசாமி கடந்த 17.02.2017 ம் தேதியில் தனது மனைவியும் 6 ம் பிரதிவாதியுமான ரகுபதி, தனது மகன்களும் 7 முதல் 9 பிரதிவாதிகளுமான குணசேகரன், மகேஷ்குமார், குருமூர்த்தி ஆகியோர்களை வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்து விட்டார், வாதிகள் மணியின் வாரிசுகள் ஆவார்கள். வாதியின் தந்தையார் மணி கடந்த 31.12.2017 ம் தேதியில் தனது மனைவியும் 1ம் வாதி ராஜாமணி, 2 ம் வாதி ராஜேஷ்குமார், 3 ம் வாதி அமுதவேணி ஆகியோர்களை வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டார்.

02(4) கானிசாமி அவருடைய தந்தை சுப்பைய கவுடர் உயிரோடு இருந்த காலத்திலேயே அவருக்கு பாத்தியப்பட்ட 2.98 ஏக்கர் பரப்பளவுள்ள சொத்தில் கடந்த 19.09.1988 ம் தேதியில் மணி பெயருக்கு உரிய தொகையை பெற்றுக் கொண்டு 0.03 ஏக்கர் பரப்பளவுள்ள காலி இடத்தை விலைக்கு கொடுத்தார். சொத்தை கிரையம் பெற்ற பிறகு அவருடைய தந்தையார் மணி தற்பொழுது அவர்கள் சுவாதீனத்திலும் , அனுபவத்திலும் உள்ள கதவு எண். 1/9-பி கொண்ட வீட்டை கட்டி அவர்களுடன் அவர் இறக்கும்வரை குடியிருந்து வந்தார். அவர் இறந்த பிறகு மேற்படி சொத்து தற்பொழுது வரை எவ்வித இடையூறும் தடங்களுமின்றி வாதிகளின் சுவாதீனத்திலும் அனுபவத்திலும் இருந்து வருகிறது. வாதிகள் திருமக்காளின்

மகன் மணியின் வாரிசுகள் என்பதால் தாவா சொத்தில் வாதிகளுக்கு 1/9 பங்கு உள்ளது. 1 மற்றும் 2 பிரதிவாதிகளுக்கு 3/9 பங்கும், 3 முதல் 5 பிரதிவாதிகளுக்கு 4/9 பங்கும், 6 முதல் 9 பிரதிவாதிகளுக்கு 1/9 பங்கும் உள்ளது. கடந்த 2016 ம் ஆண்டில் வாதிகளின் வீட்டிற்கு மேபுரம் குடியிருக்கும் 3 முதல் 5 பிரதிவாதிகள் வாதிகள் சொத்தில் சட்டத்திற்கு புறமபாக அத்துமீறி நுழைய முயன்று கெட்ட வார்த்தைகளைக் கூறி வாதிகளுடன் தகராறு செய்ததால் அவர்கள் மீது அசல் வழக்கு 286/2016 என்ற வழக்கை மாண்புமிகு உரிமையியல் நீதிமன்றம், மேட்டுப்பாளையத்தில் தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது.

02(5) வாதிகளின் தந்தையார் இறந்த பிறகு பிரதிவாதிகளிடம் கருத்து வேறுபாடு ஏற்பட்டதாலும், தாவா சொத்துக்களை கூட்டாக அனுபவிப்பதில் இடையூறாக இருந்ததாலும் பிரதிவாதிகளிடம் தாவா சொத்துக்களை பாகம் பிரித்து வாதிகளுக்கு பாத்தியப்பட்ட 1/9 பங்கை கொடுக்குமாறு பலமுறை முறையிட்டும் அவர்கள் மறுத்து விட்டார்கள். ஆகவே வாதிகள் கோரியவாறு வாதிகளுக்கு பாகப்பிரிவினை வழங்கி ஆணையிடவேண்டும்.

03. வாதி கோரிய வகையில் பாகப்பிரிவினை செய்து பிரதிவாதிகளுக்கெதிராக தீர்ப்பாண பிறப்பிக்க வேண்டுமா என்பதே இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனையாகும்.

04. வாதிகள் தரப்பில் 1 சாட்சி விசாரிக்கப்பட்டு 5 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

05. வாதிகள் தனது வழக்குரையை பின்பற்றி சாட்சியத்தை முன்வைத்துள்ளதோடு சுப்பைய கவுடர் மற்றும் கானிசாமி இடையே ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரம், சிட்டா, மணியின் இறப்பு சான்றிதழ் மணியின் வாரிசு சான்று நகல் வழிகாட்டி மதிப்பு ஆகிய ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நீதிமன்றத்தில் தோன்றி பிரதிவாதிகள் வாதியின் உரைக்கு பதிலுரை தாக்கல் செய்யவோ, வாதிகளை குறுக்கு விசாரணைக்குட்படுத்தவோ, எவ்வித

முன்முயற்ச்சியும் மேற்கொள்ளவில்லை. மேலும் வாதி தரப்பில் தாக்கல் செய்த ஆவணங்கள் குறித்தும், பிரதிவாதிகள் தரப்பில் கேள்வி எழுப்பவில்லை. இவ்வாறான நிலையில் 2ம் வாதியின் சாட்சியத்தையும், வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட சான்றாவணங்களையும் உண்மை என்று முடிவிற்கு வர இயலும்.

06. வா.சா.ஆ. 1ன் பாகப்பிரிவினை பத்திரத்தை பரிசீலனை செய்கையில் சுப்பைய கவுடருக்கு அவரது மகனாகிய கானிச்சாமிக்கு பாகப்பிரிவினை ஏற்பட்டு அதன் மூலம் வழக்கு சொத்து B.N. சுப்பைய கவுடருக்கு கிடைக்கப்பெற்றுள்ளதென்பது புலனாகிறது. மேலும் வா.சா. 1 சாட்சியத்தை பரிசீலனை செய்கையில், மேற்கண்ட சுப்பைய கவுடருக்கு ரங்கம்மாள் என ஒரு மனைவி இருந்து அவர் இறந்த பிறகு திம்மக்காள் என்பவரை திருமணம் செய்துள்ளார் என்பதும் புலனாகிறது. மேலும் சுப்பைய கவுடரை திருமணம் செய்வதற்கு முன்பாகவே திம்மக்காளுக்கு முதல் கணவர் தேசப்ப கவுடர் மூலம் மணி, துரைசாமி என்ற மகன்களும் தேசப்ப கவுடர் இறந்தபிறகு சுப்பைய கவுடரின் மூலம் சுந்தரமூர்த்தி என்ற மகனும் பிறந்துள்ளார் என்பதும், மேற்படி மணி இறந்த பிறகு அவருக்கு வாதிகள் வாரிசுகள் என்பதும் தெரியவருகிறது. சுப்பைய கவுடர் எவ்வித ஆவணங்களும் இயற்றி வைக்காமல் இறந்த பிறகு அவருக்கான சொத்தில் அவரது மனைவியாகிய திம்மக்காளுக்கு 1/3 பாகம் என பாகப்பிரிவினை கிடைக்கத்தக்கது. திம்மக்காள் இறந்த பிறகு அவருக்கு வரக்கூடிய 1/3 பாகமானது அவரது மகன்களான மணி, துரைசாமி, சுந்தரமூர்த்தி ஆகியோருக்கு சரிசமமாக கிடைக்கத்தக்கது. மணி இறந்துவிட்ட நிலையில், அவரது தாயாரிடமிருந்து அவருக்கு கிடைக்கக்கூடிய அதாவது, திம்மக்காளின் கணவரின் சொத்திலிருந்து திம்மக்காளுக்கு கிடைத்த பாகத்தில் 1/3 பாகம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது. அதாவது, மொத்த வழக்கு சொத்தில் 1/9 (1/3x1/3 ) பாகம் வாதிகளுக்கும், தலா 4/9 பாகம் சுந்தரமூர்த்தியின் வாரிசுகளுக்கும் துரைசாமியின் வாரிசுகளுக்கும் கிடைக்கத்தக்கதென் இந்நீதிமன்றம் முடிவிற்கு வருகிறது.

07. **இறுதியாக,**

1. வழக்கு சொத்தில் வாதிகளுக்கு 1/9 பாகம் எல்லைகள்

அறுதியிட்டு பாகப்பிரிவினை கிடைக்கத்தக்கதென தீர்ப்பளிக்கப்படுகிறது.

2. வழக்கின் தரப்பினர்களின் உறவினர்களை கருத்தில் கொண்டு வழக்கின் செலவுத் தொகையை அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டுமென ஆணையிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு 2022 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 31 ஆம் நாள் என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P K SIVAKUMAR
Digitally signed by P K SIVAKUMAR
Date: 2022.11.01 12:53:26 +0530

சார்பு நீதிபதி,

மேட்டுப்பாளையம்,

<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்</u>

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 8.9.1969 | சுப்பைய கவுடர் மற்றும் கானிசாமி இடையே ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரம் | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.2 | 13.11.2019 | கணிணி சிட்டா | நகல் |
| வா.சா.ஆ.3 | | வழிகாட்டி மதிப்பு சான்றிதழ் | அசல் |
| வா.சா.ஆ.4 | 30.12.1997 | மணியின் வாரிசு சான்றிதழ் | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.5 | 30.12.1997 | மணியின் இறப்பு சான்றிதழ் | சான்றிட்ட நகல் |

## சாட்சிகள் பட்டியல்

| வாதிகள் தரப்பில் | பிரதிவாதிகள் தரப்பில் |
| --- | --- |
| வா.சா.1.திரு.ராஜேஷ்குமார் | --இல்லை-- |

.

P K SIVAKUMAR Digitally signed by P K SIVAKUMAR Date: 2022.11.01 12:53:34 +0530

சார்பு நீதிபதி,

மேட்டுப்பாளையம்,